**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 430/2016**

Deposition of the witness for Prosecution **PW** 5
Name : **அருணாச்சலம்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (17.03.2026)

A1, A3 to A5 present, A2, A6 absent, petition filed and allowed.

முதல் விசாரணை

நான் அச்சன்புதுரில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அ.சா.1 சண்முக தேவரை தெரியும். வடகரை ஆதி மணிகண்ட சாஸ்தா கோவில் தர்மகர்த்தா கோவில் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 07.03.2016 ஆம் தேதி மதியம் சுமார் 02.00 மணி அளவில் சிறுவர்களும், பெரியோர்களும் பால்குடம் எடுத்துச் சென்றார்கள் இரண்டு தரப்பிலும் பால்குடம் எடுத்தார்கள். எதிரிகள் தரப்பில் பால் குடத்தை எடுத்துக் கொண்டு வேகமாக சென்றார்கள். எங்கள் தரப்பில் சிறுவர்கள் வருகிறார்கள் மெதுவாக செல்லுங்கள் என்று எதிரிகளிடம் கூறினோம். ஆனால் எதிரிகள் அதைக் கேட்காமல் கோவில் பக்கம் வைத்து எதிரிகள் சண்முக வேலை பார்த்து தேவடியா மவனே நீ எப்படி சொல்லலாம், உனக்கு என்ன உரிமை இருக்கு என்று சொன்னார். எதிரிகள் சண்முகவேலை கையாளும், செருப்பாலும் அடித்தார்கள், அவதூறாக பேசினார்கள். சண்முவகேல் தேவருக்கு காதில் ரத்தம் வந்தது தலையில் காயம் ஏற்பட்டது அவர் மயக்கம் ஆகிவிட்டார். அதன் பின்னர் அவரை அச்சம்போதூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றோம். அதன் பின்னர் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக போனார். வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கோவில் நிர்வாகத்தில் பொறுப்பில் உள்ளேனா என்றால் பொறுப்பில் இல்லை. இரண்டு தரப்பிலும் பால்குடம் எடுத்து வரும் பொழுது எத்தனை பேர் வந்திருப்பார்கள் என்றால் சுமார் 50 பேர் வந்தார்கள் இரு தரப்பிலும், எதிரிகள் எல்லாரும் பால்குடம் எடுத்து வந்தார்களா என்றால் எதிரிகள் எடுக்கவில்லை அவர்களது பிள்ளைகள் தான் பால்குடம் எடுத்து வந்தார்கள். சிறுவர்கள்வருவதால் யார் மெதுவாக போங்கள் என்று சொன்னது என்றால் எல்லாரும் தான் சேர்ந்து சொன்னோம். எங்கு வைத்து சொன்னோம் என்றால் கோவில் அவுட்டர் வைத்து தான் சொன்னோம். கோவில் அவுட்டர் என்பதால் பொதுமக்கள், அங்கிருந்தவர்கள் சம்பவத்தை பார்த்திருப்பார்கள் என்றால் சரிதான். அப்போது அங்கு எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 200 பேர் இருந்து இருப்பார். கோவிலுக்குள் உள்ளே வைத்து செருப்பால் எதிரிகள் அடித்தார்கள் என்றால் சரிதான். எந்த எதிரி செருப்பால் அடித்தார் என்று குறிப்பிட்டு எனக்கு சொல்ல முடியுமா என்றால் கூட்டமாக இருந்தால் தெரியவில்லை. நான் நேரில் பார்த்திருந்தால் யார் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியும் என்றால் சரிதான். எதிரிகள் புகார்தாரையோ கோவில் நிர்வாகத்தில் உள்ளவரை வாய் பேசினதாக குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் ஆறு பேரும் பார்த்து பேசினார்கள். யார் யார் என்ன வார்த்தைகள் பேசினார்கள் என்று குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை பார்த்ததாக பொய்யாக புகார்தாரருக்கு ஆதரவாக பொய்யாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.03.17 17:56:17 +0530

Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 430/2016**

Deposition of the witness for Prosecution **PW** 3
Name : **தளவாய்தேவர்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (17.03.2026)

A1, A3 to A5 present, A2, A6 absent, petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் அச்சன்புதுரில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சண்முகையா தேவரை தெரியும். எதிரிகளை தெரியும். எதிரிகளுக்கும், அ.சா.1 க்கும் ஆதி மணிகண்ட சாஸ்தா கோவில் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 07.03.2016 ம் தேதி மதியம் 02.00 மணிக்கு பால் குடம் எடுத்து வந்தார்கள். சிறுவர்களும், பால்குடம் எடுத்தார்கள். வெயில் அதிகமாக இருந்தது வேகமாக நடந்து சென்றார்கள். அப்போது நாங்கள் மெதுவாக போகச் சொன்னேம். அப்போது எதிரி சண்முக பாண்டி எங்களைப் பார்த்து தேவடியா மகனே நீ என்ன சொல்வது என்று பொது இடத்தில் வைத்து பேசினார். ஒருத்தருக்கு ஒருத்தர் தகராறு ஏற்பட்டது. எதிரிகள் சண்முகவேல் பாண்டியனை அடித்துப் போட்டார்கள், செருப்பால் அடித்து மிதித்தார்கள். அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அதன் பின்னர் அச்சம்புதூர் காவல் நிலையம் சென்று சண்முக தேவர் புகார் கொடுத்தார். சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றார். அதற்பின்னர் வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஆதி மணிகண்ட சாஸ்தா கோவில் எதிரிகளுக்கும் குலதெய்வம் என்றால்

சரிதான். அவர்களுக்கும் கோவிலில் பால்குடம் எடுப்பதற்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். நான் அந்த கோவிலில் பொறுப்பில் உள்ளேனா என்றால் தலைவராக உள்ளேன். நான் தலைவராக இருப்பதற்கு ஆவணம் எதுவும் போலீசிடமோ, நீதிமன்றத்திலோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். எத்தனை பேர் பால்குடம் எடுத்து வந்தார்கள் என்றால் நிறைய பேர் வந்தார்கள் விவரம் தெரியாது. எதிரிகளில் யாரெல்லாம் பால்குடம் எடுத்து வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்தில் இல்லை சண்முக தேவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. யார் யாரை எங்கே அசிங்கமாக பேசி யார் யாரை அடித்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான் சொல்ல முடியாது.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.03.17 17:56:22 +0530

Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 430/2016**

Deposition of the witness for Prosecution **PW** 4
Name : **இராமச்சந்திரன்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (17.03.2026)

A1, A3 to A5 present, A2, A6 absent, petition filed and allowed.

முதல் விசாரணை

நான் கொடிக்குறிச்சியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆசா ஒன்னும் சமூகத் தேவர் தெரியும். வடகரை ஆதி மணிகண்டன் சாஸ்தா கோவில் 25 ஊர்காரர்களுக்கு சொந்தமானது ஆகும். நாங்கள் வருடம் தோறும் வரி கொடுத்து சாமி கும்பிடுவோம் அந்த கோவில் பழமையானதால் அதை இடித்து கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். சண்முகையா பாண்டியன் என்பவர் எங்கள் கோவில் தர்மகர்த்தாவாக இருந்தார். நாங்கள் வரி கொடுத்தோம் ஆனால் எதிரி சண்முகையாபாண்டி முழுமையாக கோவிலை கட்டவில்லை பாதியில் போட்டுவிட்டார். அது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 07.03.2016 மதியம் சுமார் 02.00 மணி அளவில் பால்குடம் எடுத்து வந்தார்கள். அச்சம் புதூரில் இருந்து எடுத்து வந்தார்கள். வெயில் அதிகமானதால் பிள்ளையார் கோவில் பக்கம் அருகில் தண்ணீர் வைத்திருந்தார்கள் அதில் இரண்டு பால்குடம் வைத்திருந்தார்கள். அதனை தூக்கிக் கொண்டு போகும் பொழுது கோவிலில்வைத்து எதிரிகள் சண்முக தேவரை கையால் அடித்தார்கள். அவருக்கு தலையில் காயம் இருந்தது. அதன் பின்னர் அச்சம்பதூர் காவல் நிலையத்திற்கு சென்று அ.சா.1 புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை

.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடைபெற்றது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. பால்குடம் எடுத்து வரும் பொழுது நான் சென்றேன். நான் தற்போது நீதிமன்றத்தில் கூறியதை போலீஸ் விசாரணையின்போது கூறினேனா என்றால் கூறவில்லை. சம்பவத்தில் யார் யாரை தாக்கினார் என்று முழுமையாக எனக்கு தெரியாது என்றால் சரியல்ல நிறைய பேர் இருந்தார்கள். எத்தனை பேர் இருந்திருப்பார்கள் என்றால் 400, 500 பேர் இருந்தார்கள். அந்த கூட்டத்தில் யார் யாரிடம் முதலில் பிரச்சனை செய்தார்கள் என்று தெரியாது என்றால் சண்முகையா பாண்டியன் ஆட்கள் தான் பிரச்சனை செய்தார்கள். சம்பவத்தின் போது கூட்டமாக இருந்ததால் யார் யாரை தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது நான் பொய்யாக புகார்தாரருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் தரப்பிற்கும், எதிரிகள் தரப்பிற்கும் இடையே கோவில் சம்பந்தமாக ஏற்கனவே முன்விரோதம் இருந்ததால் அதனை மனதில் வைத்துக் கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.03.17 17:56:27 +0530

Judicial Magistrate, Shenkottai